# ஹம்பாந்தோட்டை பிரதேச சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூலை 23 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்த 3 நிர்மான வேலைகளுக்காக மற்றும் வாகனம் பழுதுபார்த்தல் செலவு ஒன்றிற்காக கூட்டுத் தொகை ரூபா 9,493,287 தொகை மிகையாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 05 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏடுகள் மற்றும் அட்டவணைகளிலேயே அவதானிக்கப்பட்ட சமமின்மைகளில் கூட்டுத்தொகை ரூபா 4,875,940 தெகையாகும்.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2006ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிக் காணப்படும் ரூபா 710,906 தொகைக்கான நிலுவை வியாபார அனுமதிப் பத்திர கட்டணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்கப்படாத பொறுப்புக்களின் மொத்தக் கூட்டுத் தொகை ரூபா 49,166,406 தொகையாகும் .

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 107,857,802 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா. | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1988 பிரதேசசபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 2 | 50,025 | கவலையீனம் அல்லது துர்நடத்தையின் காரணமாக சபைக்கு குறைவு ஒன்று அல்லது நட்டமொன்று ஏற்பட்டால் அது தொடர்பாக பொறுப்பு செல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அக்கட்டண த்தை அறவீடு செய்தல் மேற்கொள்ளப் பட வேண்டுமெனினும், சபையின் 3 வாகனங்களின் வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் போது செலுத்தப்பட தண்டப்பணத்தை பொறுப்பு சொல்ல வேண்டிய நபர்களிடம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ii) விதி 193 | | பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் குறை நிரப்புக்கள் அங்கீகாரத்துடன் இணக்கஞ் செய்து ஒவ்வொரு வருமான விடயங்கள் மற்றும் செலவு விடயங்களின் கீழ் காணப்படும் மிகை அல்லது பற்றாக்குறை தொடர்பாக விடயங்களின் கூற்றொன்று சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(5) | 91,127 | 2010 முதல் 2016 ஆண்டு வரை வழங்கியிருந்த முற்பணங்களை மீளாய் வாண்டு இறுதிவரை தீர்த்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் 571(3) | பிரமாணம் | 2,324,913 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருட காலத்தை மிகைத்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

### 1.3.6 போதிய அதிகாரத்தினை உறுதிப்படுத்திய கொடுக்கல் வாங்கல்கள்

பாதீட்டு ஏற்பாடுகளை மிகைத்து செலவிடப்பட்டிருந்த ரூபா 36,700,800 இற்கான மூலதனச் செலவுகள் மற்றும் ரூபா 137,319 தொகைக்காக ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள், பணிக்கொடை செலவை தீர்ப்பதற்காக தேவையான ஏற்பாடுகள் பெற்று கொள்வதற்கு 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 14 (1) மற்றும் 14 (2) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 8,629,022 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,821.455 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 7,224,500 | 7,753,058 | 6,919,927 | 833,131 | 368,000 | 582,424 | 668,993 | 1,134,604 |
| (ii) வாடகை | 5,157,100 | 6,332,943 | 6,257,893 | 75,050 | 4,819,000 | 1,408,910 | 1,426,870 | 23,083 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,030,600 | 1,747,778 | 1,763,328 | 710,880 | 1,126,500 | 4,136,105 | 4,213,655 | 726,429 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 6,916,100 | 9,610,153 | 4,932,870 | 22,120,460 | 6,966,000 | 10,969,313 | 9,652,805 | 17,443,177 |
| மொத்தம் | 20,328,300 | 25,443,932 | 19,874,018 | 23,739,521 | 13,279,500 | 17,096,752 | 15,962,323 | 19,327,293 |

**2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான சீட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 25,443,932தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 19,874,018,293 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய வருட இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 19,327,293 தொகைக்கான நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 23,739,521 தொகை வரை அதிகரித்திருந்தது.

**2.2.3 வீத வரி**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 832,628 தொகையாக காணப்பட்டதுடன், அதில் அடங்கியுள்ள ரூபா 5000 விட மிகையான மீதிகளையுடைய 19 அலகுகளில் இருந்து அறவிடபட வேண்டியிருந்த நிலுவை மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 253,911 தொகையாகும். நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

**2.2.4 கடை வாடகை**

சூரிய வெவ 100 அடி பாதையில் திஸ்ஸபுர கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஜுலை முதல் வாடகைக்கு கொடுத்திருந்த 100 அடி பாதையில் திஸ்ஸபுர 12 கடைகளில் இருந்து பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை அறவிடப்படாமல் 6 கடைகளிலிருந்து மாதாந்தம் ரூபா 250 வீதமும் மற்றும் மீதியான 06 கடைகளில் இருந்து மாதாந்தம் ரூபா 300 வீதம் சபை தீர்மானத்தின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண உள்ளூராட்சி ஆனையாளரினால் 2010 திசெம்பர் 27 திகதி தபபா/பபகொ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீட்டு தொகையை புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்றின் மூலம் திருத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப் பத்திர கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152 (2) இன் பிரகாரம் பல்வேறு திறந்தொழில் செய்வோர் தொடர்பாக அனுமதி பத்திர கட்டணம் விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், சட்டதரணிகள், வைத்தியர்கள் மற்றும் பதிவாளர்கள் போன்ற தொழில்களின் மூலம் அனுமதிப் பத்திர கட்டணம் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149,150 மற்றும் 152 பிரிவுகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்படாமல் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 712,956 இற்கான நிலுவை அனுமதிப் பத்திர கட்டணம் காணப்பட்டது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 6.157,085 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 15,963,375 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம்,பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி என்பன சபையினால் சபையினர் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயற்படுத்தப்படாத செய்பணிகள்

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் சபை நிதியத்திலிருந்து செயற்படுத்துவதற்காக ரூபா 1,535,000 தொகைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த 06 நிர்மாண வேலைகள் மற்றும் மூலதன உதவியின் கீழ் செயற்படுத்துவதற்கு ரூபா 16,298,050 தொகைக்கான ஏற்பாடுகள் அங்கீகரித்திருந்த 05 நிர்மாண வேலைகள் செயற்படுத்தியிருக்கவில்லை.

#### (ஆ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முழு அதிகாரப் பிரதேசமும் அடங்கும் விதத்தில் குப்பை சேகரிக்கும் சேவை ஒன்று நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சேதனைப் பசளை செயற் தளத்திற்காக பொறுப்பாளர் ஒருவர் அல்லது காவலாளி ஒருவர் சேவையின் ஈடுபடுத்தியிருக்காததுடன், நாளாந்த சம்பளம் பெறும் 06 ஊழியர்கள் சேவையில் ஈடுபடத்தியிருந்தது.

(iii) பிளாஸ்டிக் போத்தல், பிளாஸ்டிக் பொருட்கள், டின்கள் ஆகிய தண்ணீர் சேகரமாகும் விதத்தில் முறையற்ற விதத்தில் சேதனப் பசளை செயற்தளத்தில் குவிக்கப்பட்டுக் காணப்பட்டதுடன், செயற்தளத்தில் வடிகால் முறைமையும் கூட குப்பைகளினால் மூடப்பட்டிருந்தது.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசதத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணியில் 05 பதவிகள் தொடர்பாக 05 பேர் மிகையாகவும் மற்றும் 05 பதவிகள் தொடர்பாக 08 பேருக்கான வெற்றிடமும் காணப்பட்டதுடன், அதனை முறைப்படுத்துவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2003 ஆண்டின் போது இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 27,650 தொகைக்கான இடர் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

இரண்டு டிரக்டர் வண்டிகள் 18-33 வரையான மாத காலம் முதலும் மின்பிறப்பாக்கி 08 வருட காலம் முதலும் கொங்கிரீட் கலவை இயந்திரம் 02 வருட காலம் செயற்படாது காணப்பட்டது.

**3.3.2 வாகனப் பாவணை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்படும் 10 வாகனங்களை சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 29 திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 05 வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே பின்வருமாறு கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டின் மூலம் 18 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 10,198,955 தொகைக்கான ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூன்று வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 6,450,970 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 18 சதவீதம் முதல் 37 சதவீதமாக பெறுமதியான வீச்சில் காணப்பட்டது.

(இ) மூலதனச் செலவு விடயத்தில் பிரதிகூலமாக முரண்கள் ரூபா 37,130,800 தொகையாக காணப்பட்டது அப்பெறுமதி 310 சதவீதமாக இருந்தது.

**4.2 வருடாந்த பெறுகை திட்டம்**

பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 14 திகதி தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆனையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு விடயங்களுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் வருடாந்தம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்கு மீதிகள் குறைவாக மற்றும் மிகையாக காட்டப்பட்ட சந்தர்பங்கள் காணப்படல். |
| | | (ii) | நிதிக் கூற்றுக்கள் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் துணை பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியிடையே வித்தியாசங்கள் காணப்படல். |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) | நிலுவை வருமான அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | புதிய வருமானங்கள் உருவாக்கும் வழிகளை இனங்காணல் தொடர்பாக கவனம் செலுத்தி இருக்காமை. |
| | | (iii) | சேகரித்திருந்த வரியினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | சொத்துக்கள் | (i) | சபையினால் பயன்படுத்தப்படும் காணிகளின் விலை சபைக்கு உரித்தாக்குவற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. |
| | | (ii) | நீண்ட காலமாக பயன்படுத்தப்படதமல் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | முறையான ஆய்வுகள் மற்றும் மதிப்பாய்வு இன்றி மதிப்பீடுகள் தயாரித்திருத்தல். |
| | | (ii) | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |